### தேனி முதல் மதுரை வரை பைபாஸ் சாலை அமைத்திடுவீர்!

# தமிழ்நாட்டில் கால்நடை மருத்துவமனைகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்த நிதி ஒதுக்கிடுக!

## மக்களவையில் தங்க தமிழ்ச்செல்வன் வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக. 7 -

தேனி முதல் மதுரை வரை உள்ள சாலையை பைபாஸ் சாலையாக அமைக்க அரசு முன்வர வேண்டும் என்றும் தமிழ்நாட்டில் கால்நடை மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.500 கோடி நிதி ஒதுக்கிட வேண்டும் என்றும் மக்களவையில் தமது கன்னிப் பேச்சில் கழக உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற மக்களவையில், மீன்வள, கால்நடை மற்றும் பால் உற்பத்தி அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மானியக் கோரிக்கைகள் பற்றிய விவாதத்தில் கழக உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன் பேசியதாவது:

ஒன்றிய அரசால் தமிழ்நாட்டிற்குரிய நிதியும் திட்டங்களும் புறக்கணிக்க ப்பட்டாலும், முத்தமிழ் அறிஞர் கலைஞரிடம் அரசியல் நிர்வாகத்தினை கற்றுக்கொண்ட தமிழக மக்களுக்கு வாக்குறுதிகளை நிறைவேற்றிவரும் தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நல்லாசியோடும், என்னை வெற்றிபெற செய்த தேனி நாடாளுமன்றத் தொகுதி மக்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், கூட்டணிக்கட்சித் தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு என் உரையை துவக்குகிறேன்.

ஒன்றிய அரசில் 31 துறைகள் உள்ளன. அதில் 5 துறைகள் மட்டும் விவாதம் செய்யப்படுகிறது. அதில் மீன்வள, கால்நடை மற்றும் பால் உற்பத்தி துறையை எடுத்ததற்கு என பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கால்நடை துறை தமிழ்நாடு கால்நடை மற்றும் உயிரியல் பல்கலைக்கழகம்:**

1. 1989ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர், அவர்களால் நிறுவப்பட்ட தமிழ்நாடு கால்நடை மற்றும் உயிரியல் பல்கலைக்கழகத்தின் கீழ் ஏழு கால்நடை மருத்துவக்கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றது.

2. இந்த நிறுவனங்களின் கட்டமைப்பை மேம்படுத்த, நூலகங்கள், அரங்கங்கள், விளையாட்டு மைதானங்கள், மையங்கள் மற்றும் சுற்றுச்சுவர்களின் கட்டுமானம் போன்றவற்றை உருவாக்குவதற்காக தேசிய கால்நடை மிஷன் திட்டத்தின் (National Livestock Mission) மூலம் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்குமாறு ஒன்றிய அரசை பரிந்துரைக்கிறேன். 3. இந்த முதலீடு, கால்நடை மற்றும் உயிரியல் அறிவியல் துறையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கிடைக்கக்கூடிய கல்வி சூழலையும் வளங்களையும் மேம்படுத்த, நிறுவனங்களின் மேம்பாட்டுக்கும் பெரிதும் உதவும்.

**கால்நடை மருத்துவ கல்லூரிகளின் செயல்பாடு மற்றும் வசதிகள்:** 1. தமிழகத்தில் சட்டமன்றத் தொகுதி அடிப்படையில் செயல்படும் மொபைல் கால்நடை மருத்துவக் குழுக்களை, ஒன்றிய (Block) அடிப்படையில் செயல்படுமாறு மாற்ற வேண்டும்.

2. இந்த மொபைல் கால்நடை மருத்துவக் குழுக்களின் வசதிகளை மேம்படுத்த, தேசிய கால்நடை மிஷன் திட்டத்தின் (National Livestock Mission) மூலம் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும். இதில் ஹைட்ராலிக் லிப்ட்கள் (Hydraulic Lift) உள்ளிட்ட வசதிகளை உள்ளடக்க வேண்டும்.

**தேனி மலைமாடு:**

1. தமிழகத்தின் தேனி பகுதியைச் சேர்ந்த தேனி மலைமாடு, தற்போது சுமார் 30,000 மாடுகள் மட்டுமே உள்ளன. இந்த மாடுகள் தேனி தொகுதியில் விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த இனத்தை பாதுகாக்க மற்றும் மேம்படுத்த, தமிழக அரசு தேனி கால்நடை கல்லூரியில் ஒரு ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்க முடிவு செய்துள்ளது. எனவே, இந்த ஆராய்ச்சி நிறுவனத்தை அமைக்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தேசிய கால்நடை நோய் கட்டுப்பாட்டு திட்டம் (National Animal Disease Control Programme):**

1. ஒன்றிய அரசானது தேசிய கால்நடை நோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ், கோமாரி மற்றும் கருச்சிதைவு நோய்க்கான தடுப்பூசி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தில் கோமாரி நோய்களை கட்டுப்படுத்த வருடத்திற்கு இரண்டு தடுப்பூசிகள் தருவது மட்டுமே அரசு அனுமதிக்கிறது. ஆனால், அறிவியல் சான்றுகளின் அடிப்படையில், மூன்று தடுப்பூசிகள் கொடுப்பது நோய்களை கட்டுப்படுத்த உதவும். எனவே, தடுப்பூசி அளவீட்டை மாற்ற பரிந்துரைக்கிறேன்.

2. தற்போது கோமாரி மற்றும் கருச்சிதைவு நோய் தடுப்பூசிப் பணியை கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் பயிற்சி பெற்ற தடுப்பூசி பணியாளர்கள் மூலம் மேற்கொள்வதைக் கால்நடை உதவி மருத்துவர்கள் கண்காணித்து வருகின்றனர். தடுப்பூசி விவரங்களை பாரத் பசுதன் இணையதளத்தில் உள்ளீடு செய்வதற்கென்றே தனியாக டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர்களை (Data Entry Operator) நியமிக்க வேண்டும் என்றும், போதுமான உபகரணங்களை வழங்க வேண்டும் என்றும் கேட்டுகொள்கிறேன். 3. தமிழ்நாட்டில், தோல் கழலை நோய் (Lumpy Skin Disease) மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே தோல் கழலை நோய்க்கு எதிரான தடுப்பூசியை விரைவில் உருவாக்குவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். இந்தத் தடுப்பூசியை உருவாக்குவது மற்றும் விநியோகிப்பது விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க உதவும்.

**இந்திய கால்நடை ஆராய்ச்சி சபை, ICVR (Indian Council of Veterinary Research):**

1. இந்தியாவில் சுமார் 303.76 மில்லியன் பசுக்கள், 74.26 மில்லியன் செம்மறி ஆடுகள், 148.88 மில்லியன் வெள்ளாடுகள், 9.06 மில்லியன் பன்றிகள், 851.81 மில்லியன் கோழிகள் உள்ளன. 2. கால்நடை துறை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (GDP) 4.75% மற்றும் வேளாண் GDPக்கு 30.47% பங்களிப்பு செய்கிறது. கால்நடை துறை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் வேளாண் உள்நாட்டு உற்பத்திக்கும் அதிகரித்துக் கொண்டிருப்பது இந்த துறையின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. எனவே, கால்நடை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க முயற்சிகளுக்கு ஒரு தனி கவுன்சில், அதாவது இந்திய கால்நடை ஆராய்ச்சி கவுன்சில் (ICVR) உருவாக்கப்பட வேண்டும்.

**தமிழகத்தில் கால்நடை கட்டமைப்பு மருத்துவமனைகளின் மேம்பாடு:**

1. தமிழ்நாட்டில் சுமார் 3,000 கால்நடை மருத்துவமனைகள்

உள்ளன. இவைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த, ஒன்றிய

அரசு 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும்.

**பால்உற்பத்தி துறை**

இந்தியா பால் உற்பத்தியில் உலகில் முன்னணி நாடாக உள்ளது. உலகின் மொத்த பால் உற்பத்தியில் இந்தியா சுமார் 25% பங்கை வகிக்கிறது. வருடத்திற்கு 231 மில்லியன் டன் என்ற தற்போதைய உற்பத்தியுடன், ஆண்டுக்கு 5% வளர்ச்சி. தமிழ்நாடு 10.60 மில்லியன் டன் ஆண்டுதோறும் உற்பத்தியுடன் 11வது இடத்தில்

உள்ளது மற்றும் கூட்டுறவுகள் மூலம் பால் சேகரிப்பில் 5வது இடத்தில் உள்ளது.

1.தற்போது ஒன்றிய அரசின் பெரும்பாலான நிதி கிராமப்புறங்களில் தரமான பால் உற்பத்தி மற்றும் கொள்முதலுக்கு செலவிடப்படுகிறது. பதப்படுத்தல் தொடர்பான கட்டமைப்பு வசதிகளுக்கான நிதி குறைந்து வருவதால், பால் பதப்படுத்தல் மற்றும் பொருள் உற்பத்திக்கான கட்டமைப்பு உருவாக்கத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாலில் 40% க்கும் அதிகமான பங்கை திட்ட மிடப்படாத துறை கையாளுவதால் இது மிகவும் முக்கியமானது.

2. ப்ரண்ட் அல்லாத நெய்களுக்கு 5% ஜி.எஸ்.டி. மட்டுமே விதிக்கப்படுகிறது, ஆனால் பிராண்ட் நெய் மீது 12% ஜி.எஸ்.டி. விதிக்கப்படுகிறது. ஆகையால் GST 12% இருந்து 5% ஆகக் குறைக்க பரிந்துரைக்கிறேன்.

3. முதன்மை விவசாய கடன் சங்கங்கள் (பாக்ஸ், PACS Primary Agricultural Credit Societies) போல அனைத்து கூட்டுறவு சங்கங்களும் கணினிமயமாக்கப்பட வேண்டும் மற்றும் கிராம நிலை முதல் கூட்டமைப்பு நிலை வரை பால் சேகரிப்பு நடவடிக்கைகள் கணினிமயமாக்கப்பட வேண்டும். பால் உற்பத்தியாளர் களிடமிருந்து எண்ணிக்கை, கிடைக்கக்கூடிய கால்நடை உள்கட்டமைப்பு, பால்

சேகரிப்பு, நுகர்வு, வாகன மேலாண்மை ஆகியவற்றைப் பற்றிய தரவு உண்மையான நேரத்தில் டிஜிட்டல் முறையில் இருக்க வேண்டும்.

4. பால் டேங்கர்களை சுங்கச் செலுத்தல் விதி விலக்காக்க வேண்டும்.

5. ஜி.எஸ்.டி.க்கு முன், தரப்படுத்தல் நோக்கத்திற்காக பால்

பண்ணைகளால் வாங்கப்பட்ட ஸ்கிம் பால் தூள் (Skim Milk Powder) மற்றும் வெண்ணெய் விலக்கு பெற்றன. 01.07.2017 முதல், ஸ்கிம் பால் தூள் 5% மற்றும் வெண்ணெய்க்கு 12% ஜி.எஸ்.டி. விதிக்கப்படுகிறது. பால் விலக்கு பெற்ற பொருள்

என்பதால், சந்தை பாலின் தரப்படுத்தலுக்கு பயன்படுத்தப்படும் பொருட்களும்

பால் தொழிலின் ஜி. எஸ்.டி.யிலிருந்து விலக்கு பெற வேண்டும்.

நன்மைக்காக

6. கிராமப்புறங்களில் விவசாயிகளின் முக்கிய சொத்து கால்நடைகள். அவை இழந்தால் முழு விவசாய குடும்பமும் பாதிக்கப்படும். தற்போது அரசு கால்நடை காப்பீட்டிற்கு மானியம் வழங்குகிறது. விவசாய காப்பீடு போலவே, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து பால் கால்நடை மந்தைகளையும் 100% மானியத்தில் காப்பீடு செய்ய வேண்டும் அல்லது குறைந்த பிரீமியம் செலுத்துவதற்கான நடைமுறைகளை எடுக்க வேண்டும்.

7. சங்க கட்டிடங்கள் கட்டுவதற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரகப்புனரமைப்பு வேலை உறுதி திட்டத்தில் (MGNERGS) ஒதுக்கப்படும் நிதி அதிகரிக்கப்பட வேண்டும்.

**மீன்வளம்**

1. பாக் நீரிணை இந்தியா மற்றும் இலங்கை இடையே உள்ள ஒரு முக்கிய மீன்பிடி பகுதி ஆகும். இங்கு 2,500 மோட்டார் படகுகள், 13,000 சாதாரண படகுகள், 80,000 மீனவர்கள் உள்ளனர். 2. இயற்கை பேரிடர்கள் மற்றும் பிற காரணங்களால் தமிழக மீனவர்கள் இலங்கை எல்லையை கடக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்பொழுது இலங்கை அதிகாரிகளால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

3. இவ்வாறு சிறை பிடிக்கப்பட்ட 175 படகுகளில் 14 படகுகள் இலங்கை நீதிமன்றதால் விடுதலை செய்யப்பட்டுள்ளது. இதில் மீட்கும் நிலையில் உள்ள 12 படகுகள் மீட்டு தமிழகம் கொண்டுவர தமிழ்நாடு முதல்வர் தலைவர் ஸ்டாலின் அவர்கள் கடந்த அக்டோபர் 2023 அன்றே நிதி ஒதுக்கி மீட்புக்குழு அமைத்து ஆணையிட்டார்கள். ஆனாலும், ஒன்றிய அரசானது தமிழ்நாட்டின் மீட்புக்குழு இலங்கைக்கு சென்று விடுதலை செய்யப்பட்ட படகுகளை தமிழ்நாட்டிற்கு கொண்டு வருவதற்கான அனுமதியை இன்றுவரை வழங்கவில்லை.

4.இந்த விவகாரம் அவசரமாக கையாளப்பட வேண்டும். மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**இந்தோ - இலங்கை மையக் குழுக் கூட்டம் (Indo Srilankan Joint working committee meeting):**

1. இந்தோ - இலங்கை மையக் குழு கூட்டம் மார்ச் 25, 2022 அன்று நடந்தது. ஆனால், அதற்குப் பிறகு கூட்டங்கள் நடக்கவில்லை. இதை மீண்டும் ஒருங்கிணைக்க வேண்டும். இதன் மூலம் தமிழக மக்களின் பிரச்சனைகளை தீர்க்க முடியும்.

கடைசியாக என் தொகுதியை பற்றி சில விஷயங்களை பேச விரும்புகிறேன்:

மொத்தம் 5,80,000 வாக்கு வித்தியாசத்தில் தளபதி ஸ்டாலின் அவர்களின் செல்வாக்கில் என்னை தேனி தொகுதி மக்கள் வெற்றிபெற வைத்தார்கள், அந்த நம்பிக்கையின் பெயரில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நான் கேட்கவிரும்புகிறேன்.

ஒன்றிய அரசு கொஞ்சம் கருணை காட்ட வேண்டும்,

**1. திண்டுக்கல் to சபரிமலை இரயில் பாதை:**

இந்த கோரிக்கை நீண்ட நாள் கோரிக்கையாகும். நான் சிறுவயதாக இருக்கும் போதிலிருந்தே இந்த கோரிக்கையை மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.. ஆகையால் இந்த நீண்ட நாள் கோரிக்கையை ஒன்றிய அரசு ஏற்று நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**2. போடி, தேனி, ஆண்டிபட்டி, உசிலம்பட்டி ஆகிய நகரங்களுக்கு பைப்பாஸ் (Byepass) சாலை:**

தேனி to மதுரை மொத்தம் 120 kms மட்டுமே. ஆனால் இந்த bye pass இல்லாததால் மதுரைக்கு செல்ல 3 மணி நேரம் ஆகின்றது. ஆகையால் இந்த bye pass சாலையை அமைக்க அரசு முன்வர வேண்டும்.

3. முல்லை பெரியாறு அணையின் பேபி டேமை பலப்படுத்தி 152 அடி நீர் தேக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

**4. சாக்கலூத்து மெட்டில் தார் சாலை அமைக்க வேண்டும்:**

தமிழகத்தின் தேனி மாவட்டத்தையும், கேரளாவின் இடுக்கி மாவட்டத்தையும் இணைக்கும் பாரம்பரிய மலைப்பாதைகள் பல இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் சாக்கலூத்துமெட்டுப் பாதை. சுமார் 4 கிலோமீட்டர் தூரம்கொண்ட மலைப்பாதையில் சாலை அமைப்பதன் மூலம், தேனியின் தேவாரம் பகுதியையும், கேரளாவின் உடும்பஞ்சோலைப் பகுதியையும் இணைக்க முடியும். இதனால், தற்போது போடி மெட்டு வழியாக சுமார் 60 கிலோமீட்டர் தூரம் பயணிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

**5. மயிலாடும்பாறை to மலப்புரம் சாலையை விரிவுப்படுத்த வேண்டும்:** தேனி மாவட்டம் மயிலாடும்பாறையில் இருந்து மதுரை மாவட்டம் மல்லப்புரம் வழியாக உசிலம்பட்டி, பேரையூர் பகுதிகளுக்கு செல்வதற்கு சாலை அமைத்தால் பயண தூரமும், பயண நேரமும் குறையும். இதனால், மயிலாடும்பாறை - மல்லப்புரம் இடையே சாலை அமைக்க வேண்டும் என்று நீண்டகாலமாக மக்கள் கோரிக்கை வைத்து வந்தார்கள்.

இதைக்கருத்தில் கொண்டு கடந்த 19 ஆண்டுகளுக்கு முன்பு மயிலாடும்பாறையில் இருந்து மல்லப்புரம் வரை சுமார் 20 கிலோமீட்டருக்கு சாலை அமைக்கப்பட்டது. ஆனால் நாளடைவில் இந்த சாலை பராமரிப்பின்றி சேதமடைந்துவிட்டது.

சாலை குறுகிய அளவில் இருந்த நிலையில் அதில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவில்லை. ஆகையால் இந்த சாலையை விரிவுபடுத்த அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தங்க தமிழ்ச் செல்வன் பேசினார்.

---

### கழகத் தலைவர் தலைமையில் அமைதிப் பேரணி!

# தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதியினர் திரளாகப் பங்கேற்பீர்!

## பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, ஆக. 7 -

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. , மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. அறிக்கை வருமாறு:

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 6 வது நினைவு நாளை முன்னிட்டு கழக தலைவர் அவர்கள் தலைமையில் இன்று (7.8.2024) காலை 7 மணிக்கு சென்னை, அண்ணாசாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடம் வரை அமைதி பேரணி நடைபெறவுள்ளது. இதில் சென்னை தென்மேற்கு மாவட்ட தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொண்டு அமைதி பேரணியில் பங்கேற்க வேண்டும்.


முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி காலை 11 மணியளவில் முத்தமிழறிஞ ர்கலைஞர் அவர்களின் புகழுக்கு புகழ்சேர்க்கும் ம்வகையில், சென்னை தென்மேற்கு மாவட்ட தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதிக்குட்பட்ட அனைத்து வட்டங்களிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை மலர்களால் அலங்கரித்து கழகத்தினர் அனைவரும் மலர் தூவி மலர் அஞ்சலி செலுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அனைத்து வட்டங்களிலும் சுமார் 10000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

# மூவேந்தர்க் கிணையான மூதறிஞர் புகழ்வாழி!



திருக்குவளைப் பூவாகப் பூத்தவர்அவர்
திருவாரூர்த் தேர்போல மூத்தவர்!
கருக்கொண்ட முகிலைப்போல் ஆர்த்தவர்அவர்
கனல்கொண்டு தமிழெழுதிப் பார்த்தவர்!

‘இளமையினைப் பலி’யாக அளித்தவர்அவர்
இனவேங்கைப் புலியாகச் சிலிர்த்தவர்!
களமாடி வாழத்தான் முளைத்தவர்புதுக்
கற்பனையில் அற்புதங்கள் விளைத்தவர்!

இந்திப்பேய் வரும்போது தடுத்தவர்உயர்
எண்ணத்தில் புயலாகித் துடித்தவர்!
முந்திப்போய்ச் சிறைவாசம் அடைந்தவர்தன்
மூளையினால் எதிரிகளைக் கடைந்தவர்!

பெரியாரின் ஏடுகளைச் சுமந்தவர்அவர்
பேசிநின்ற சுவடுகளில் நடந்தவர்!
எரிமலையின் சீற்றத்தை முகந்தவர்அவர்
எதிர்ப்புகளுக் கிடையேதான் வளர்ந்தவர்!

சூரியனில் சுடரெடுத்துச் சுழன்றவர்அவர்
சுற்றிவரும் பூமியைப்போல் உழன்றவர்!
ஆரியத்தின் ஆயுதங்கள் அளந்தவர்அதை
அண்ணாவின் கவசத்தால் பிளந்தவர்!

தனிச்சிறையில் என்றாலும் கிடந்தவர்அவர்
தமிழ்காக்க இருட்டறையில் தவழ்ந்தவர்!
‘அணிலோடும்’ விளையாடி மகிழ்ந்தவர்அவர்
அரசியலைத் தமிழாக்கிக் குளிர்ந்தவர்!

தடைகண்டு படைகண்டு சிரித்தவர்தன்
தலைகொண்டு தொடர்வண்டி மறித்தவர்!
நடைவண்டி யில்சென்றும் உழைத்தவர்தன்
நாவாலே வெற்றிகளைக் குவித்தவர்!

சமத்துவத்தை வாழ்நெறியாய் வரித்தவர் புதுச்
சரித்திரத்தைப் பொன்னேட்டில் பொறித்தவர்!
நமக்கென்றே ‘தளபதியைக்’ கொடுத்தவர்நம்
நரம்புகளில் உணர்வேற்றிக் களித்தவர்!

வரலாற்றின் பெருமிதமாய் நிமிர்ந்தவர்தன்
வரலாற்றில் தமிழகத்தை வரைந்தவர்!
உரைநடையின் ஒளியாகி உயர்ந்தவர்அவர்
உவமையிலாக் கலைஞானம் மிகுந்தவர்!

தனைக்கொண்டு தனையெழுதி நின்றவர்அவர்
தமிழென்னும் தானைகொண்டு வென்றவர்!
முனைமுகத்தில் எப்போதும் முன்னவர்அவர்
மூவேந்தர்க் கிணையான மன்னவர்!

தேனகத்துப் பூமழையாய்ப் பொழிந்தவர்அவர்
செம்மொழியாய் மனமெல்லாம் வழிந்தவர்!
ஞானத்தால் பகையாவும் கொய்தவர்அவர்
நமக்காக மானவுடை நெய்தவர்!

காற்றுக்கும் திசைகாட்ட வந்தவர்தமிழ்க்
காவிரியாய் வளமள்ளித் தந்தவர்!
ஆற்றுக்கும் நடைதந்த நாவலர்அவர்
அரசியலில் கொடிநட்ட பாவலர்!

அவர்போற்றி வைத்ததமிழ் வாழியே!அவர்
அடிவைத்த தடமெல்லாம் வாழியே!
அவர்செய்த அணிகலன்கள் வாழியே! நல்
அறம்போல அவர்புகழும் வாழியே!



**டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.,**
மேனாள் ஒன்றிய இணை அமைச்சர்